# இடைமாற்றக்கால நீதி

சர்வாதிகார ஆட்சி மற்றும் மோதல் முரண்பாட்டுக் காலப்பகுதிகளில் அநேக சந்தர்ப்பங்களில் பாரிய மனிதஉரிமை மீறல்கள் இரகசியமான முறையில் இடம்பெறுகின்றன. உண்மைகள் மறைக்கப்பட்டு, அவை நினைத்தவாறு கையாளப்படுகின்றன. ஜனநாயகத்துக்கான நிலைமாற்றம் ஏற்பட்ட பின்னர் அநேக சந்தர்ப்பங்களில் குற்றவாளிகள் வலிதாக்கப்பட்ட தண்டனைப் பயமின்மை ஏற்பாடுகளால் பாதுகாப்புப் பெறுகின்றனர். பல விடயங்களில் அவர்கள் இன்னமும் பெருமளவிலான அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டு, உண்மையில் நடந்த விடயங்களைத் திரிபுபடுத்திக் கூறுகின்றனர். மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, முன்னேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட நிறுவனங்கள் பலவீனமடைகின்றன. அல்லது முற்றாகவே சரிந்து விழுகின்றன. சுதந்திரமான, வகைப்பொறுப்புள்ள ஒரு ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதாயின், நடந்த விடயங்கள் சம்பந்தமான உண்மைகள் விசாரணை செய்யப்பட்டு, வெளிக்கொணரப்பட்டு மக்களிடையே பகிரப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு, பலியானோருக்கு உதவிகளும், கௌரவமும் கிட்டுதல் வேண்டும். பாரிய உரிமைமீறல்கள் மீண்டும் இடம்பெறாதவகையில் சட்டங்களும், நிறுவனங்களும் மறுசீரமைக்கப்படுதல் வேண்டும்.

இடைமாற்றக்கால நீதிச் சட்டகமென்பது பாரிய உரிமைமீறல் வரலாற்றைக் கையாளும் வகையிலான பேருபாயங்களை அபிவிருத்திசெய்து, நடைமுறைக்கிடுவதற்கு உதவக்கூடிய ஒரு கைக்கருவியாகும். இது நான்கு பிரதான மூலகங்களைக் கொண்டதாகும்: உண்மையைத் தேடுதல்; குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருதல்; பலியானோரின் வாழ்க்கையையும், கௌரவத்தையும் மீளளிப்புச் செய்ய உதவுதல் (மீளளிப்பு) மற்றும் உரிமைமீறல்கள் மீண்டும் இடம்பெறாமைக்கான உத்தரவாதத்தை வழங்குதல் (அல்லது நிறுவனங்களின் மறுசீரமைப்பு). இந்த மூலகங்கள் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கிநிற்பவையாகும். ஆகவே, பயனுறுதிமிக்க ஓர் அணுகுமுறை அனைத்துமடங்குவதாகவும், சூழமைவுக்குப் பொருத்தமானவகையில் பல்வேறு முன்முயற்சிகள் தொடராக இடம்பெறுவதாகவும் இருத்தல் வேண்டும். உரிமைமீறல்கள் எங்களது ஆண்களையும், பெண்களையும் வேறுபட்ட முறைகளில் பாதித்தன என்பதை விளங்கிக்கொள்வதற்கு, ஒரு பால்நிலைக் கூருணர்வுகொண்ட அணுகுமுறை அவசியப்படுகின்றது.




Diagram adapted from the Transitional Justice Research Clinic's infographic, "Components of Transitional Justice."

இலகுவில் பலியாகுவோர் மற்றும் ஓரங்கட்டப்படுவோரின் பங்கேற்பை உறுதிசெய்வதற்கும் இது அவசியப்படுவதாகும்.

பாரிய அளவிலான கடந்தகாலத் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றமையை ஏற்றுக்கொண்டு, அவற்றுக்கு நிவாரணம் தேடும்வகையில், வகைப்பொறுப்பை உறுதிசெய்து, நீதியையும், மீளிணக்கத்தையும் ஈட்டிக்கொள்ளும் வகையில் ஒருசமூகம் மேற்கொள்ளும் முயற்சிகளுடன் இணைந்தவகையிலான செயல்முறைகளினதும், பொறிமுறைகளினதும் ஒரு பூரணவீச்சே இடைமாற்றக்கால நீதியாகும். இடைமாற்றக்கால நீதிச் செயல்முறைகளும், பொறிமுறைகளும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதில் ஒரு தீர்மானகரமான கூறாகும்.[1]

## உண்மை

பாரிய உரிமைமீறல் குறித்த அனுபவங்கள் தனிப்பட்டவையாக இருப்பதில்லை. அவை ஒரே இடங்களில், வன்செயல் சுற்றுக்களில் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றன. நடந்த விடயங்கள் சம்பந்தமாகத் தைரியமாகவும், நேர்மையுடனும் உண்மையை எதிர்கொள்ள மறுப்பது அவை இவ்வாறு மீண்டும் மீண்டும் இடம்பெறுவதற்கு வழிவகுக்கின்றது. ஜனநாயக ஆட்சிக்கான நிலைமாற்றம் தன்னளவில் பாரிய குற்றச்செயல்களுக்கான மூல காரணங்களையும், காரணிகளையும் அகற்றிவிடமாட்டாது. வன்செயல் சுற்றுக்கள் மீண்டும் இடம்பெறும்போது நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தமுறுவோர் சக்திமிக்க குற்றமிழைப்போரை வகைப்பொறுப்புக் கூறவைக்கவும் மாட்டாது. என்ன நடந்தது, யார் பொறுப்பாளிகள், பாதிப்புற்றோர் மீதான விளைவு, மற்றும் வன்செயல்களின் மூலகாரணங்கள் குறித்த உண்மைகளை எதிர்கொள்ளாமல், அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளாமல் ஒருசமூகம் இந்த ஆழமான, நாசகரமான சுற்றுக்களிலிருந்து விடுபடுதல் இயலாது.

அரசாங்கமும், சிவில் சமூகமும், பாரிய உரிமைமீறல்கள் சம்பந்தமாக உண்மைக் கதையை நிரூபிக்கும் வகையில் பல்வேறு வழிகளைப் பயன்படுத்தலாம். உண்மையைத் தேடும் முன்முயற்சிகள் உத்தியோகபூர்வமானவையாக அல்லது உத்தியோகபூர்வமற்றவையாக அமையலாம். உத்தியோகபூர்வமான உண்மைதேடும் பிரயத்தனங்கள் உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழுக்கள் (TRCS), விசாரணை ஆணைக்குழுக்கள், தேசிய மனிதஉரிமை ஆணைக்குழுக்கள் மேற்கொள்ளும் விசாரணைகள், உண்மைதேடும் பணிக்குழுக்கள், குற்றவியல் விசாரணைகள் மற்றும் ஏனைய அரசாங்க முன்முயற்சி விசாரணைகள் என்பவற்றை உள்ளடக்கலாம்.

உண்மைதேடும் ஒவ்வொரு ஆணைக்குழுவும் ஒருதனிச்சிறப்பான நிறுவனமாகும். ஆயினும், வழக்கமாக அவற்றின் உள்மையச் செயற்பாடுகள் பாதிப்புற்றோர் மற்றும் சாட்சிகளிடமிருந்து கூற்றுக்களைத் திரட்டுதல் ,பால்நிலை மற்றும் சிறுவர் குறித்த கருப்பொருள் ஆராய்ச்சிகள் நடத்துதல்,காரணங்கள் மற்றும் விளைவுகள் உள்ளிட்டவகையில் உரிமைமீறல்களை பகுப்பாய்வுசெய்தல், பகிரங்க விசாரணை அமர்வுகள், மற்றும் ஏனைய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், மற்றும் தேடல் முடிவுகள் மற்றும் விதப்புரைகள் என்பவற்றை உருவரைக் குறிப்பாக வழங்கும் ஓர் இறுதி அறிக்கையை வெளியிடுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.[2]

உத்தியோகபூர்வ உண்மைதேடும் பிரயத்தனங்கள் கிராமிய மட்டங்களிலான உரிமைமீறல்கள் ஆவணப்படுத்தல், சிவில் சமூகஅறிக்கைகள், வெகுஜன ஊடகவிசாரணைகள், விவரணத் திரைப்படங்கள், வானொலி அறிக்கைகள் மற்றும் கல்விப்புலமையாளர்களின் ஆராய்ச்சிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் செயற்பாடின்மை காரணமாக சிவில் சமூகம் உத்தியோகபூர்வமற்ற, ஆணைக்குழுக்கள், விசாரணைகள் அல்லது மக்கள் நியாயசபைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இவை இரண்டாம் உலகமகாயுத்தத்தின்போது ஜப்பானியப் படையினர் “கேளிக்கை இன்பசுகத்துக்காகப் பயன்படுத்திய பெண்கள்” மீதான பாரியபாலியல் வன்செயலைக் கண்டித்து டோக்கியோவில் 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயல்முறை மற்றும் 1965 இல் இந்தோனேசியாவில் இடம்பெற்ற 500000 மக்களின் பாரிய படுகொலையைக் கண்டித்து ஹேக் நகரில் இடம்பெற்ற கண்டனச் செயல்முறை போன்றவற்றை ஒத்த நிகழ்வுகளாகும்.

## வழக்குத் தொடரல்கள்

மனித வரலாறு முழுவதுமே தமது குற்றச்செயல்களுக்குத் தம்மை வகைப்பொறுப்புக் கூறவைக்கமுடியாதென்று நம்பிக்கை கொண்டிருந்த தலைவர்களால் பாரிய படுபாதகச் செயல்கள் புரியப்பட்டுள்ளன. உலகின் பலபாகங்களில் இக்கொடூர நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதற்கான காரணம் இத்தண்டனைப் பயமின்மை உணர்வேயாகும். சர்வதேசக் குற்றவியல் சட்டத்துக்கெதிரான பாரிய குற்றங்கள் உள்ளடங்கும் வகையில் மோசமான மனிதஉரிமைமீறல்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரல்கள் இத்தகையோரை அச்சுறுத்துவதற்கும், சட்டத்தின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் அவசியமானவையாகும். அது சலுகைபெற்றோர், பாதுகாப்புப் படையினர் மற்றும் சாதாரண மக்கள் சமமான அளவில் தமது செய்கைகளுக்கு வகைப்பொறுப்புக் கூறவேண்டுமென்னும் முக்கியமான செய்தியை வழங்குகின்றது.

சர்வதேசக் குற்றவியல் சட்டங்களின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட “மோசமான மனிதஉரிமைமீறல்கள்” எனப் குறிப்பிடக்கூடிய குற்றச்செயல்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன.

1. இனப்படுகொலை: ஒரு தேசிய, இனத்துவ, இன அல்லது மதக்குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழித்துவிடும் நோக்கத்துடன் கூடிய குறிப்பிட்ட நடவடிக்கைகள். இச்செயற்பாடுகள் கொலை, பாரதூரமான உடல் அல்லது உளத்தீங்குகளை ஏற்படுத்துதல், பலவந்தமாகப் பிள்ளைகளைப் பிரித்து இடம்மாற்றுதல் மற்றும் ஒரு தேசிய, இனத்துவ, இன அல்லது மதக்குழுக்களில் பிறப்பைத் தடுக்கும் நோக்கத்துடன் இடம்பெறும் நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்குவதோடு, அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல.

2. மனிதகுலத்துக்கெதிரான குற்றச்செயல்கள்: சிவிலியன் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் பரவலான அல்லது முறைமையான தாக்குதல்களின் ஒருபகுதியாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள். இச்செயற்பாடுகள் கொலை, சிறையிலடைத்தல், சித்திரவதை, பாலியல் வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்குவதோடு, அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல.

3. யுத்தக்குற்றங்கள்: ஓர் ஆயுதமோதலின்போது, யுத்தத்தின் சட்டங்களையும், வழமைகளையும் மீறும்வகையில் இடம்பெறும் செயற்பாடுகள். இச்செயற்பாடுகள் கொலை, அங்கங்களைச் சிதைத்தல், மனிதாபிமானமற்றமுறையில் நடத்துதல், சித்திரவதை, பாலியல் வல்லுறவு, மற்றும் அடிமைத்தனம் என்பவற்றை உள்ளடக்குவதோடு, அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல.

4. ஆக்கிரமிப்பு: ஓர் அரசினால் வேறோர் அரசின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு, அல்லது அரசியல் சுதந்திரத்துக்கெதிராக அல்லது ஐக்கியநாடுகள் சாசனத்துக்கு இணக்கமற்றவகையில் ஆயுதபலப் பிரயோகத்தைத் திட்டமிடல், தயாரித்தல், முன்னெடுத்தல் அல்லது நடைமுறைக்கிடுதல். அரசுத் தலைவர்கள் உள்ளடங்கும் வகையில், இக்குற்றத்தைப்புரியும் தனிநபர் அரசின் அரசியல் அல்லது இராணுவநடவடிக்கைமீது பயனுறுதியுள்ள கட்டுப்பாட்டைக் கொண்டவராக இருந்திருத்தல் வேண்டும்.

இக்குற்றங்களுக்கெதிராகச் சர்வதேசக் கலப்பு (சர்வதேச-தேசிய) அல்லது தேசிய நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யலாம்.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (ICC) என்பது நெதர்லாந்தில் ஹேக் நகரில் அமர்வுகளை நடத்தும் நிரந்தரமான, சர்வதேச நீதிமன்றமாகும். அது 120 நாடுகள் ரோமன் நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதில் கைச்சாத்திட்ட பின்னர் 2002 இல் தாபிக்கப்பட்டதாகும். இந்த நியதிச்சட்டமே இது தாபிக்கப்படுவதற்கு வழிவகுத்தது. ICC தாபிக்கப்படுவதற்கு முன்னர் முன்னாள் யூக்கோலேவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை(ICTY) ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை(ICTR) எனப்படும் இரண்டு வேளைக்கேற்ற நீதிமன்றங்கள் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையினால் நிறுவப்பட்டன. ICC நீதிமன்றத்தின் அங்கத்துவ அரசொன்றில் ஆட்புலத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் கொண்டதாகும்.

ICC யின் பணிப்பாணை பின்வரும் முக்கிய கோட்பாடுகளை உள்ளடக்கியதாகும்:

- இணைவு முழுமை: ஓர் அரசு குற்றங்களை விசாரணைசெய்வதற்கு அல்லது அவற்றுக்கெதிராக வழக்குத் தொடருவதற்கு மனதின்றி அல்லது ஆற்றலின்றி இருக்கும் நிலையில் இந்த நீதிமன்றம் தனது பணிப்பாணையின் கீழ்வரும் குற்றச்செயல்களை மாத்திரம் விசாரணை செய்யலாம்.
- கடந்தகால நிகழ்வுகளை உள்ளடக்காமை: பணிப்பாணை 2002 இல் நீதிமன்றம் தாபிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற குற்றச்செயல்களை அல்லது நீதிமன்றம் தாபிக்கப்பட்ட பின்னர் அதில் இணைந்தவிடத்தில் அந்த அரசு ரோம் நியதிச்சட்டத்தை ஏற்றங்கீகரித்த திகதிக்குப்பின்னர் இடம்பெற்ற குற்றச்செயல்களை மாத்திரம் விசாரணை செய்யலாம்.
- தன்னார்வ அங்கத்துவம்: ICC பணிப்பாணை ரோம் நியதிச்சட்டத்தைத் தன்னார்வரீதியில் ஏற்றங்கீகரித்த அரசுகள் விடயத்தில் பிரயோகமாவதாகும். இந்த விதிக்கு ஒரு புறநடையாகவிருப்பது சில சந்தர்ப்பங்களில் ரோம் நியதிச்சட்டத்தை ஏற்றங்கீகரிக்காத அரசுகள் விடயத்திலும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை ஒரு விடயத்தை விசாரணை செய்யுமாறு ICC க்கு ஆற்றுப்படுத்தலாம். எவ்வாறாயினும், ஏதாவது பாபதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்று இத்தகைய பாதுகாப்புச்சபை ஆற்றுப்படுத்தலைத் தனது வீட்டோ (இரத்து) அதிகாரத்தைக்கொண்டு தடுக்கலாம். இவ்வாறாக, அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஐக்கிய இராச்சியம், அல்லது பிரான்ஸ் ஒரு பாதுகாப்புச்சபை ஆற்றுப்படுத்தலை இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுக்கலாம். சமீப வருடங்களில், நிரந்தர அங்கத்துவ நாடுகளுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை பாரிய குற்ச்செயல்கள் சம்பந்தமுற்ற ஒரு வீச்சான முக்கிய விடயங்களில் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளன.

கலப்பு நீதிமன்றங்கள்: இவை சர்வதேச மற்றும் தேசிய நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், மற்றும் விசாரணையாளர்கள் சம்பந்தமுறும் நீதிமன்றங்களாகும். உதாரணங்கள்- சியெராலியோனுக்கான விசேட நீதிமன்றம், கம்போடியாவின் விசேட நீதிமன்றப் பணி அவை, லெபனானுக்கான நியாயசபை மற்றும் திமோர்-லெஸ்தே விசேட தீர்ப்பாயம் மற்றும் பாரதூரக் குற்ற அலகு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

அனைத்துலக நியாயாதிக்கம் என்பது பாரிய குற்றச்செயல்கள் எங்கு, எவரால் புரியப்பட்டாலும், குற்றமிழைத்தவர்களுக்கெதிராக வழக்குத்தொடரும் அரசுகளின் ஆற்றல் ஆகும்.

சர்வதேச நீதிமன்றங்களில் சில அனுகூலங்கள் அவற்றின் உயர்ந்த மட்டத்திலான சட்டத்துறைத் தேர்ச்சியும், புறவயத்தன்மையுமாகும். எவ்வாறாயினும், அவை மிகவும் செலவுமிக்கவையும், மீறல்களால் பாதிப்புற்று, துன்புற்றிருப்போரும், என்ன நிகழ்ந்ததென்பதை அறிந்துகொள்ள வேண்டியோருமான மக்களிடமிருந்து தொலைதூரத்தில் இடம்பெறுகின்றவையுமாகும்.

குற்றங்கள் இடம்பெற்ற சூழமைவில் தொழிற்படும் கலப்பு மற்றும் தேசிய நீதிமன்றங்கள் அனைவரையும் ஈடுபட வைப்பதோடு, செலவு குறைந்தவையுமாகும். எவ்வாறாயினும், அவை அரசியல் செல்வாக்குகளாலும், சிக்கலான சர்வதேசக் குற்றங்களைக் கையாளும் தேசிய முறைமைகளின் ஆற்றலின்மைகளினாலும் பாதிப்புறுகின்றன.

அனைத்துலக நியாயாதிக்கம்: இது குற்றவாளிகள் எங்கிருந்தாலும், எவருக்கெதிராகப் பாரிய குற்றச்செயல்கள் இடம்பெற்றிருந்தாலும் அவர்களுக்கெதிராக வழக்குத்தொடரும் அரசுகளின் ஆற்றலாகும். இத்தகைய அனைத்துலக நியாயாதிக்கத்தை நடைமுறைக்கிடும் தேசிய சட்டங்களை நிறைவேற்றியுள்ள அரசுகள் குற்றச்செயல்கள் தமது தேசிய எல்லைகளுக்கு வெளியில் இடம்பெற்றிருந்தாலும், குற்றமிழைத்தோரெனச் சந்தேகப்படுவோரைக் கைதுசெய்து, அவர்களுக்கெதிராக வழக்குத் தொடரலாம்.

## ஈடுசெய்தல்

பல வருடகாலத் தொடர்ச்சியான பாரிய உரிமைமீறல்களும், சர்வாதிகார ஆட்சியும் குடிமக்களுக்கும், அரசுக்குமிடையிலான உறவைப் பாரதூரமாகச் சேதப்படுத்துகின்றன. இந்த உறவை மீண்டும் கட்டியெழுப்புவதாயின் அரசாங்கம் கவனப்பராமரிப்புச் சம்பந்தமான ஒரு செய்தியை விடுத்து, குடிமக்களுக்கெதிரான மனிதஉரிமைமீறல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் தனது பிரதான கடமையிலிருந்து தவறியதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச முகவர்களே இந்த மீறல்களில் சம்பந்தமுற்ற சந்தர்ப்பங்களில் இது மேலும் முக்கியம்வாய்ந்த ஒரு விடயமாகின்றது. இக்கடமையை நிறைவேற்றும் ஒரு முக்கியமான வழிவகை பாதிப்புற்றோருக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் இழப்புகளுக்கு ஈடுசெய்யும் பயனுறுதிமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். (ஈடுசெய்தவர்கள்).

ஈடுசெய்தல்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கலாம்:[4]

- பலியான உயிர்களுக்கான இழப்பீடு.
- மோசமான உரிமைமீறல்கள் இடம்பெற முன்னர் பாதிப்புற்றோர் ஆரம்பத்தில் இருந்து நிலைமையை மீட்டெடுக்கும் மீளளிப்புகள்.
- மருத்துவ, உளவியல், சட்ட மற்றும் சமூகசேவைகளை உள்ளடக்கும் புனர்வாழ்வு
- துன்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நினைவாலயங்கள் என்பவற்றை உள்ளடக்கும் திருப்தி.
- பாதிப்புற்றோருக்கு உரிமைமீறல்கள் மீண்டும் இடம்பெறமாட்டாது என்பவற்றுக்கான உத்தரவாதத்தை வழங்கும் வகையிலான பயனுறுதிமிக்க மறுசீரமைப்புகள்

ஈடுசெய்தல்கள் பொருளாதார, அல்லது அடையாளரீதியான, தனிநபர் தொடர்பான அல்லது கூட்டு விளைவு கொண்டவையாக அமையலாம்.

- பொருளாதார ஈடுசெய்தல்கள்: கொடுப்பனவுகள், ஓய்வூதியங்கள், இலவச சுகாதாரக் கவனப்பராமரிப்பு, புலமைப்பரிசில்கள், திறன் அபிவிருத்திப் பயிற்சிகள் மற்றும் சிறு நிதியளிப்புக் கடன்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.
- அடையாளரீதியான விடயங்கள் பாதிப்புற்றோரின் துன்பங்களைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளுதல் ஆகும். அவை நினைவாலயங்கள், பகிரங்க இடங்களுக்கு மறுபெயரிடல், அரசும், குற்றமிழைத்தோரும் மன்னிப்புக் கோருதல் மற்றும் நினைவு தினங்களை ஏற்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்குவதாகும்.
- தனிநபர் ஈடுசெய்தல்கள் என்பவை தனிப்பட்டரீதியில் பாதிப்புற்ற நபர்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கை அங்கிகரிப்பதோடு, காத்திரமான சமூக மற்றும் பொருளாதார அனுகூலங்களை அவர்களுக்கு வழங்குபவையாகும்.
- கூட்டுரீதியில் இடம்பெறும் ஈடுசெய்தல்கள் ஒரு குழுவென்ற ரீதியில் மனிதஉரிமைமீறல்களை அனுபவித்த அல்லது ஒரேவிதமான உரிமைமீறல்களை அனுபவித்தோருக்கு வழங்கப்படும் அனுகூலங்களாகும்.

ஈடுசெய்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் பாதிப்புற்றோரைச் சம்பந்தமுறுத்துவதாகவும் அவர்களுக்கு அதிகாரவலுவூட்டுவதாகவும் இருப்பதோடு, அவை வெறுமனே அவர்கள் அனுபவித்த விடயம் சம்பந்தமான உண்மையை அங்கீகரிக்காது, சில அனுகூலங்களை வழங்குபவையாக மாத்திரம் அமைந்துவிடக்கூடாது.

## உரிமைமீறல்கள் மீண்டும் இடம்பெறாது என்பதற்கான உத்தரவாதங்கள் (நிறுவன மறுசீரமைப்புகள்)

இடைமாற்றக்கால நீதிச்சட்டகத்தில் பொதுவான நான்கு மூலகங்களில் மூன்று - உண்மை, வழக்குத் தொடரல்கள் மற்றும் ஈடுசெய்தல்கள் - கடந்தகாலத்தில் நடந்த விடயங்களைக் கையாளுபவையாகும். நான்காவது, மூலகம் எதிர்காலம் சம்பந்தமான மறுசீரமைப்புகளில் கவனம் செலுத்துகின்றது. கடந்தகாலம் சம்பந்தமாக வெளிக்கொணரப்பட்ட உண்மைகள் சகல தனிநபர்களினதும், ஜனசமூகங்களினதும் பாரிய அளவிலான மனிதஉரிமைமீறல்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும்வகையில் அவசியப்படும் சட்ட மற்றும் நிறுவனரீதியான மறுசீரமைப்புகளை அபிவிருத்திசெய்வதற்கான அடிப்படையாக அமைதல்வேண்டும்.

திரும்பவும் இவை இடம்பெறாதென்பதை உறுதிசெய்வதற்கான உத்தரவாதத்தை வழங்குவதற்கு அவசியமான மாற்றங்கள் சூழமைவைப் பொறுத்தவையாகும். மறுசீரமைப்பு அவசியப்படும் நிறுவனங்கள் அல்லது முறைமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- அரசியலமைப்பும், சட்டங்களும்
- கல்வி நிறுவனங்கள்
- நீதித்துறை
- வெகுஜன ஊடகங்கள்
- பாதுகாப்புப் படைகள் (இராணுவம், பொலிஸ், உளவுத்துறை)
- அரசியல் முறைமைகள்

உரிமைமீறல்களைப் புரிவதில் பங்கேற்போர் பகிரங்கப் பதவிகளில் தொடர்ந்தும் இருக்காதவகையில் தனிநபர்களைப் பரிசீலனை செய்வதற்கான பிரயத்தனங்களை ஏற்படுத்துதல் வேண்டும். ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகியோருக்கெதிரான பாரபட்சங்கள் மற்றும் பாகுபாடுகளை ஒழிக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொருவரும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழக்கூடிய ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை உருவாக்குபவையாக அமைதல் வேண்டும்.

குறிப்புகள்
1. செயலாளர் நாயகத்தின் வழிகாட்டல் குறிப்பு: இடைமாற்றக்கால நீதிக்கான ஐக்கிய நாடுகள் அணுகுமுறை ("வழிகாட்டல் குறிப்பு") 2010, P.2 https://www.un.org/ruleoflaw/files/TJ_Guidance_Note_March_2010FINAL.pdf.
2. வழிகாட்டல் குறிப்பு, P.8
3. இவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நியாயாதிக்கத்தைக்கொண்டுள்ள குற்றச்செயல்கள் ஆகும். பார்க்கவும் - சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் நியதிச்சட்டம், 1998 http://legal.un.org/icc/statute/99_corr/cstatute.htm.
4. வழிகாட்டல் குறிப்பு, P.9- 8